Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 173/2024 PW-3**

Name : பாக்கியலட்சுமி
Father / Husband name : அர்ச்சுணன்
Village : பாஞ்சாலம்
Age : 32
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 08.06.2026

Accused 2 present. A1, A3 absent. Petition u/s 317 CrPC filed and allowed. Defence counsel present. APP absent. Witness identified by Roshanai PS PS HC 2735 Tr.Palanivel.

**சாட்சி மனுவின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எங்கள் ஊரில் புதுக்காலனி தெருவில் மைதானம் உள்ளது என்றால் சரிதான். அந்த மைதானத்தில் பொங்கல் திருவிழா, தமிழ்புத்தாண்டு போன்ற விஷேசங்கள் கொண்டாடுவார்கள் என்றால் சரிதான். 2023 ம் ஆண்டு ஆங்கிலப்புத்தாண்டு அந்த மைதானத்தில் கொண்டாடப்பட்டது என்றால் சரிதான். புதுக்காலனி தெருவில் எனது வீடு இல்லை என்றால் சரியல்ல, புதுக்காலனி தெருவிலுள்ள குமார் வீட்டின் பக்கத்தில் எனது வீடு உள்ளது. எதிரிகள் எனது உறவினர்கள் என்றால் சரிதான். நந்தினி, செல்வக்குமார், சுனில், மேகலா, சுதாகர் ஆகியோர்கள் எனது உறவினர்கள் என்றால் சரிதான். சுனில் என்பவர் எனது வீட்டில் அருகில் உள்ள பாலத்தில் ரேடியோ செட் போட்டார் என்றால் சுனில் மட்டும் அல்ல, அந்ததெருவிலுள்ள அனைவரும் சேர்ந்து ரேடியோ போட்டார்கள். அதற்கு மின்இணைப்பு எங்கிருந்து எடுக்கப்பட்டது என்றால் எனது வீட்டிலிருந்து எடுக்கப்பட்டது.

2. சண்டை நடந்தபோது நான் எனது வீட்டிலிருந்து வந்தேன் என்றால் சரிதான்.

எங்கள் தெருவில் கடைசியில் செல்வக்குமார் என்பவரின் வீட்டின் அருகே கற்கள் கொட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. கிரவுண்டில் கொட்டியிருந்தது. எனது வீட்டிற்கும் பாலத்திற்கும் சுமார் 10, 20 அடி தூரம் இருக்கும் என்றால் சரிதான். வீட்டிற்கும் பாலத்திற்கும் இபி கம்பம் இல்லை என்றால் சரிதான். எனது வீட்டிலிருந்து பாலத்திற்கு வரவேண்டுமென்றால் இருட்டான பகுதியை கடந்துவரவேண்டும் என்றால் சரிதான். யார் சொல்லி எனக்கு சண்டை நடந்தது தெரிந்து வந்தேன் என்றால் நான் அங்கு தான் இருந்தேன். பாலத்தின் அருகே சண்டை நடந்தது என்றால் சரிதான். அப்போது சுமார் 50 நபர்கள் இருந்தார்கள் என்றால் சரிதான். அந்த இருட்டில் யார் சண்டை போட்டார்கள் என்று தெரியாது என்றால் சரியல்ல, முதலில் பாலத்தின் அருகே நடந்தது, பின்னர் மைதானத்திலுள்ள அலுவலக கட்டிடத்திற்கு பின்புறம் நடந்தது, அங்கு தான் செல்வகுமாருக்கு அடிப்பட்டது.

3. போலிசார் என்னை விசாரிக்கும்போது ஸ்பீக்கர்பாக்ஸ்க்கு நான் மின் இணைப்பு தந்ததாக சொன்னேனா என்றால் சொன்னேன். புத்தாண்டு அன்று போலிசார் வந்து பாட்டுப்போட்டது சம்மந்தமாக பேசிவிட்டு சென்றார்களா என்றால் இல்லை, நாங்கள் பாட்டுபோடுவதற்கு முன்பாக மைதானத்தில் பாட்டு போட்டிருந்தார்கள். நான் அடிப்பட்டவருடன் மருத்துவமனைக்கு செல்லவில்லை என்றால் சரிதான், எனது கணவர் செல்வகுமார் மற்றும் அவரின் மனைவி ஆகியோர்கள் இருச்சசக்கர வாகனத்தில் சென்றார். அன்றையதினம் போலிசார் விசாரித்த பிறகு மீண்டும் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு சம்மந்தமாக காவல் நிலையம் சென்றேனா என்றால் ஒருமுறை சென்றேன். எத்தனை நாட்கள் கழித்து காவல் நிலையம் சென்றேன் என்றால் காயம்பட்டவர்கள் மருத்துவமனைக்கு சென்றபிறகு வழக்கு பதிவு செய்த பிறகு நான் சென்றேன்.

4. அ.சா.2 செல்வகுமார் எனக்கு என்ன உறவு என்றால் நான் அவருக்கு

பெரியம்மா மகள். எதிரிகள் எந்தவித இடையூறும் செய்யவில்லை, வழக்கம்போல மைதானத்தில் பாட்டுப்போட்டார்கள், நானும் சுனிலும் சாலையை மறித்து ரேடியோ போட்டோம் என்றால் சரியல்ல. சண்டையை பார்த்துவிட்டு செல்வகுமார் ஓடிவரும்போது கால் தவறி கல் மீது விழுந்து இடது கண்ணில் அடிப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி காயத்தை வைத்து எதிரியின் மீது பொய்யான புகார் கொடுத்து, பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது வீட்டிலிருந்து மின் இணைப்பு கொடுக்கவில்லை, சுனில் மின் இணைப்பிலிருந்து திருட்டுத்தனமாக இணைப்பு கொடுத்தார் என்றால் சரியல்ல. சுனில் மின் இணைப்பு வழக்கிலிருந்து தப்பிக்க எனது வீட்டிலிருந்து மின் இணைப்பு எடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை, வீட்டில் இருந்தேன் என்றால் சரியல்ல, நான் அங்கு தான் இருந்தேன்.

**குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது.**

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால்
தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு
செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு
அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என்
முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.

Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 173/2024 PW-5**

Name : சுனில்
Father / Husband name : சுதாகர்
Village : பாஞ்சாலம்
Age : 23
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 08.06.2026

Accused 2 present. A1, A3 absent. Petition u/s 317 CrPC filed and allowed. Defence counsel present. APP absent. Witness identified by Roshanai PS PS HC 2735 Tr.Palanivel.

**சாட்சி மனுவின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவத்தின்போது எனக்கு விவரம் தெரியும், எனக்கு வயது 20 என்றால் சரிதான். எதிரிகள் எனது உறவினர்கள் என்றால் சரிதான். காயம்பட்ட நபர் எனது அப்பாவின் உடன்பிறந்த தம்பி என்றால் சரிதான். சாட்சிகள் நந்தினி, பாக்கிலட்சுமி, மேகலா, சுதாகர் ஆகியோர்கள் இரத்த உறவு, ஒரே தெருவில் வசிக்கிறோம் என்றால் சரிதான். எங்கள் தெருவில் மைதானம் உள்ளது, அதில் விசேசங்கள் நடைபெறும் என்றால் சரிதான். எனது வீடும் செல்வக்குமார் வீடும் ஒன்று என்றால் சரியல்ல, எனது வீடு 4 வீடுகள் தள்ளி சத்தியா, சுதாகர் வீட்டின் அருகில் உள்ளது. செல்வகுமாரின் வீட்டின் அருகில் காலியிடம் அதிகமாக உள்ளது என்றால் அதிகமாக இல்லை.

2. புத்தாண்டு அன்று ரேடியா செட் வாடகைக்கு எடுத்து போட்டோம் என்றால் சரிதான். அதற்கு போலிசாரிடம் அனுமதிபெறவில்லை என்றால் சரிதான். அதற்கு மின் இணைப்பு எங்கிருந்து எடுத்தேன் என்றால் அ.சா.3 பாக்கியம் வீட்டிலிருந்து எடுத்தேன். மேற்படி விவரத்தை போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நாங்கள் பாட்டுப்போடுவதற்கு முன்பு மைதானத்தில்

பாட்டுப்போட்டார்கள் என்றால் இல்லை, நாங்கள் தான் விஷேசம் செய்தோம். ஒரேயிடத்தில் இருவர் பாட்டுப்போட்டால் பிரச்சனை ஏற்படும் என்றால் நாங்கள் வருட வருடம் பாட்டுப்போடுவோம். நாங்கள் வைத்த ஸ்பீக்கர் எவ்வளவு தூரத்திற்கு கேட்கும் என்றால் சுமார் 50 மீ தூரத்திற்கு கேட்கும். பொங்கல், தீபாவளி, ஆங்கிலப்புத்தாண்டு சமயத்தில் மைதானத்தில் பாட்டுபோடுவார்கள், நாங்கள் பாட்டுப்போட்டவர்களுக்கு போட்டியாக பிரச்சனை செய்தோம் என்றால் சரியல்ல.

3. அங்கிருந்த பொதுமக்கள் எங்களை தட்டிக்கேட்டதால் நாங்கள் எதிரிகளிடம் சண்டை போட்டோம் என்றால் சரியல்ல. இதை பார்த்து எனது சித்தப்பா வரும்போது கால் தடுக்கி விழுந்து இடது கண்ணில் அடிப்பட்டது என்றால் சரியல்ல. அடிப்பட்ட சித்தப்பாவை அங்கிருந்தவர்கள் மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றார்கள் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் சம்பவம் நடைபெறவில்லை, சித்தப்பாவிற்கு அடிப்பட்டுவிட்டதால் அவருக்கு ஆதரவாக பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மின் இணைப்பு திருட்டுத்தனமாக எடுத்தது தெரிந்துவிடும் என்பதால் நானும் சித்தி, சித்தப்பா ஆகியோர்கள் பொய் புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. சம்பவத்தின்போது விசாரித்ததை தவிர மீண்டும் விசாரிக்கவில்லை என்றால் 2, 3 முறை என்னை விசாரித்தார்கள்.

4. ஸ்பீக்கர் எந்தயிடத்தில் வாடகைக்கு எடுத்தோம் என்று சொன்னேனா என்றால் இல்லை, ஸ்பீக்கர் எங்களுடையது. மைதானத்திற்கு அந்தப்பகுதியிலிருந்து சம்பவயிடத்திற்கு எதற்கு வந்தேன் என்று பேரிலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் வழக்கம்போல் புத்தாண்டு கொண்டாடுவதற்கு வந்தேன். நான் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக்கொள்ளவில்லை என்றால் சரிதான். சித்தப்பாவுடன் மருத்துவமனைக்கு செல்லவில்லை என்றால் சரியல்ல, நான் தான் சித்தப்பாவை

அழைத்துச்சென்றேன். இந்த வழக்கு சம்மந்தமாக நான் நேரில் பார்க்கவில்லை, எதிரிக ளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது.**

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.

Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 173/2024 PW-6**

Name : சத்தியா
Father / Husband name : சுதாகர்
Village : பாஞ்சாலம்
Age : 42
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 08.06.2026

Accused 2 present. A1, A3 absent. Petition u/s 317 CrPC filed and allowed. Defence counsel present. APP absent. Witness identified by Roshanai PS PS HC 2735 Tr.Palanivel.

**சாட்சி மனுவின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. அ.சா.5 சுனில் எனது மகன் என்றால் சரிதான். அசா.7 சுதாகர் எனது கணவர் என்றால் சரிதான். அ.சா.1, அ.சா.2 ஆகியோர் மைத்துனர் மற்றும் அவரின் மனைவி என்றால் சரிதான். சாட்சி மேகலா, பாக்கியலட்சுமி, பச்சையப்பன் ஆகியோர்கள் எனது உறவினர்கள் என்றால் சரிதான். சண்டை சம்மந்தமாக யார் எனக்கு சொன்னது என்றால் சின்ன பசங்கள் சொன்னார்கள். நான் செல்வதற்குள் எனது மைத்துனரை மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றார்கள் என்றால் சரியல்ல, நான் சென்று அழைத்துச்சென்றேன். எனக்கு தகவல் கிடைதத நேரம் என்ன என்றால் சுமார் 09.00 - 09.10 மணி இருக்கும். நான் செல்லும்போது சுமார் 50 நபர்கள் இருந்தார்கள் என்றால் சரிதான். சம்பவத்தை பார்த்தவர்கள் அந்த தெருவை சேர்ந்தவர்கள் 50 நபர்கள் இருப்பார்கள் என்றால் சரிதான்.

2. அங்குள்ள மைதானத்தில் தான் நிகழ்ச்சிகள் நடக்கும் என்றால் சரிதான். அந்த மைதானத்தில் பாட்டுப்போட்டால் ஊர் முழுவதும் கேட்கும் என்றால் சரிதான். மைதானத்திற்கும் பாலத்திற்கும் சுமார் 10 அடி தூரம் இருக்கும் என்றால் 3 அடி,

4 அடி இருக்கும். அந்த மைதானத்தில் அந்தத்தெருமக்கள் சுமார் 7 மணிக்கு பாட்டுப்போட்டார்கள் என்றால் சரிதான். எனது மகன் 9 மணிக்கு பாட்டுப்போட்டார் என்றால் எனது மகன் பாட்டு போடவில்லை, பசங்க போடும்போது உடன் சென்றார். அதற்கு மின் இணைப்பு எங்கிருந்து எடுத்தார்கள் என்றால் பாக்கியலட்சமி வீட்டிலிருந்து எடுத்தார்கள். இபி ஒயரில் எடுக்கவில்லை என்றால் சரிதான். எனது மகன் இபி கம்பத்திலிருந்து இணைப்பு எடுத்து பாட்டுப்போட்டதால் தான் பிரச்சனை, அந்த மைதானத்தில் தான் மக்கள் அனைவரும் ஒன்றுகூடுவார்கள் என்றால் சரியல்ல.

3. புதுக்காலனி எனது மைத்துனரின் வீட்டிற்கு செல்வதற்கு அந்த பாலத்தின் வழியாக தான் செல்லவேண்டும் என்றால் சரிதான். அந்த வழியில் பாட்டுபோட்டால் அந்த வழியாக செல்பவர்களுக்கு இடையூறாக இருக்கும் என்றால் எனது மகன் மைதானத்தில் தான் பாட்டு போட்டார், சாலையில் இல்லை. போலிசார் எங்களை விசாரித்தாரா என்றால் முண்டியம்பாக்கம் மருத்துவமனையில் எங்களை விசாரித்தார்கள். அதன்பிறகு போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். எனது மைத்துனர் அடிப்பட்டதாலும், எனது மகன் மின் இணைப்பு திருட்டுத்தனமாக எடுத்து பொதுமக்களுக்கு இடையூறாக பாட்டுப்போட்டார் என்றால் சரியல்ல. இதை பார்த்து எனது மைத்துனர் வரும்போது கால் தடுக்கி விழுந்து இடது கண்ணில் அடிப்பட்டது என்றால் சரியல்ல.

4. எனது மகன் இந்த வழக்கில் இருப்பதால் எதிரிகளுக்கு எதிராக பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. யார் வீட்டிலிருந்து மின் இணைப்பு எடுத்தோம் என்று போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் போலிசாருக்கு தெரியும். எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல, செல்வக்குமார் கண்ணில் அடிப்பட்டதற்கு மாதத்திற்கு 3 முறை மருத்துவமனைக்கு சென்றுவருகிறார். மேற்படி மருத்துவ

ஆவணங்களை போலிசாரிடம் கொடுத்தோமா என்றால் கொடுத்தோம். செல்வக்குமார் என்ன வேலை செய்கிறார் என்றால் நகராட்சியில் வேலை செய்துவிட்டு பின்னர் ஆட்டோ ஓட்டிவருகிறார்.

**குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது.**

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால்
தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு
செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு
அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என்
முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.